மதுரை மாவட்டம்

QMD

காலாண்டுத் தேர்வு – 2026

தேதி: 21/09/2026

11 – ஆம் வகுப்பு

வணிகவியல்

நேரம்: 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பிரிவு – I

(20 x 1 = 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு _____ என்று பெயர்.
அ) அங்காடி ஆ) சந்தை இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி

2. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
அ. உற்பத்தித் தொழில் ஆ. வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

3. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று கூட்டுறு சாரா நிறுவனம்?
அ) கூட்டுப் பங்கு நிறுமம் ஆ) தனியாள் வணிகம் இ) அரசு நிறுமம் ஈ) கூட்டுறவு

4. இந்து கூட்டுக் குடும்பம் யாரால் நிர்வகிக்கப்படுகிறது?
அ) முதலாளி ஆ) கர்த்தா இ) மேலாளர் ஈ) கூட்டாளி

5. நிறுவனத்திற்கும் வெளிநபருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றிக் குறிப்பிடுவது எது?
அ) தகவலறிக்கை ஆ) சங்க நடை முறை விதிகள்
இ) அமைப்பு முறையேடு ஈ) கூட்டுருவாக்கச் சான்றிதழ்

6. கூட்டுறவு தோல்வியடைவதற்கான காரணம் அ) வரம்பற்ற உறுப்பினர்
ஆ) ரொக்க வியாபாரம் இ) தவறான நிர்வாகம் ஈ) இழப்பு ஏற்படுவதால்

7. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக _____ பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன .
அ) ஆவணம் ஆ) தனியார் இ) குளிர்பதன ஈ) கூட்டுறவு

8. கீழ்கண்டவற்றுள் காப்பீடு ஒப்பந்தத்திற்கு பொருந்தாதது எது? அ) தன்னிச்சை ஒப்பந்தம்
ஆ) நிபந்தனை ஒப்பந்தம் இ) ஈட் டுறுதி ஒப்பந்தம் ஈ) பகிர்ந்தளித்தல்

9. புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை _____
அ) உற்பத்தி திறன் ஆ) செலவு குறைப்பு இ) திறன் ஈ) அலகுகள்

10. ஒரு அரசாங்க நிறுவனம் எவர் பெயரில் பங்குகளை வாங்குகிறது? அ) பிரதமர்
ஆ) குடியரசுத் தலைவர் இ) இந்தியத் தலைமை நீதிபதி ஈ) மாநில முதலமைச்சர்

11. நெறிமுறைகள் முக்கியம் ---------- க்கு.
அ) உயர்மட்ட மேலாண்மை ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்
இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

12. எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கதாக உள்ளது?
அ) சட்ட ம் ஆ) நெறிமுறை இ) ஒழுங்குணர்வு ஈ) பொருளாதாரம்

13. _____ஒரு சரக்கேற்றி மூலம் பொருட்களைப் பெற்றுக்கொள்வதை ஏற்றுக் கொள்வதற்கான ஆவணம்.
(அ) வழிச் சீட்டு (ஆ) சரக்குக் குறிப்பு (இ) கப்பல் வாடகை ஒப்பாவணம் (ஈ) ஒப்பந்த இரசீது

14. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது ..... . (அ) கிராம சேமிப்பு
(ஆ) வணிகச்சேமிப்பு (இ) தொழிற்துறை வளர்ச்சி (ஈ) விவசாய வளர்ச்சி

15. பல நாடுகளில் இயங்கும் நிறுவனங்கள் ஒரு நாட் டில் இருந்து நிர்வகிக்கப்படுகின்றன . இதனை _____ நிறுவனங்கள் எனலாம். அ) அரசு நிறுவனங்கள் ஆ) பன்னாட் டு நிறுவனங்கள்
இ) தனியார் நிறுவனங்கள் ஈ) இணை நிறுவனங்கள்

16. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு அ) கடன் உறுதி கடிதங்கள்
ஆ) பரிசு காசோலைகள் இ) பாதுகாப்பு பெட்டகங்கள் ஈ) வைப்புகளை ஏற்றல்

17. தலைமை நிர்வாகத்தின் பங்கு என்பது, அதன் முழு அமைப்பு எதை நோக்கி வழி நடத்த வேண்டும்? அ) பொது நடத்தை ஆ) அமைப்பு நடத்தை
இ) நேர்மையான நன்நெறி நடத்தை ஈ) தனிநபர் நடத்தை

18. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, _____ ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
அ) 1936 ஆ) 1935 இ) 1934 ஈ) 1933

19. பொருத்துக.

			1	2	3	4	5
1. அயல்நாட் டு நிறுமம்	–	i) நெஸ்ட்லே	அ)	i	ii	iii	iv	v
2. தனி உரிமையியல்	–	ii) டொமினோஸ் பீஸா	ஆ)	iv	iii	ii	i	v
3. ஏட் டுக்கடன் முகமை	–	iii) கேன்பேங்க் பாக்டர்ஸ் லிமிடெட்	இ)	ii	iii	i	iv	v
4. கூட்டுறவுச் சங்கம்	–	iv) கோ ஆப் டெக்ஸ்	ஈ)	iii	iv	i	ii	v
5. துறைவாரி நிறுவனம்	–	v) இந்திய இரயில்வே துறை						

20. கூற்று (A): பொதுக் கழகம் என்பது பாராளுமன்றமோ சட்டமன்றமோ இயற்றும் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு தன்னாட்சியுரிமை பெற்ற நிறுவனமாகும்
காரணம் (R): பொதுக் கழகம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தனித்தியங்கும் தன்மையுடன் சட்டத்தால் உருவாக்கப்படுவதாகும்.
அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான தவறான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

பிரிவு – II

குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 30 –க்கு கட்டாயமாக பதிலளிக்கவும். 7 x 2 = 14

21. நாளங்காடி என்றால் என்ன?
22. உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
23. முற்றுரிமை என்றால் என்ன?
24. கைபேசி வங்கியியல் பற்றிக் கூறுக.
25. பெயர்ச்சியியல் என்றால் என்ன?
26. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன ?
27. சிகப்பு நாடா போக்கு என்றால் என்ன?
28. கூட்டுறவு அமைப்பு என்றால் என்ன?
29. வட்டாரக் கிராமிய வங்கிகளின் நோக்கங்கள் யாவை?
30. _____ அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம், உலகெங்கிலும் உள்ள போக்குவரத்து முறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தியது.

பிரிவு – III

குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 40 க்கு கட்டாயமாக பதிலளிக்கவும். (7 x 3 = 21)

31. மின்னணு வணிகத்தினால் வாங்குபவர்க்கு ஏற்படும் நன்மைகள் யாவை?
32. குளிர்சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?
33. அடகுக் கடன் என்றால் என்ன?
34. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக.(ஏதேனும் இரண்டு)
35. இந்தியக் காப்பீட்டு ஒழுங்கமைப்பு ஆணையம் (IRDAI) என்றால் என்ன?
36. கப்பல் இரசீது என்றால் என்ன?
37. அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று தீமைகளை விளக்குக.
38. மருவூர் பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் விளக்குக.
39. வணிக நெறிமுறைகள் கருத்து என்றால் என்ன?
40. பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் படித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளின் கல்வியை உறுதி செய்ய வழங்கும் காப்பீட்டு திட்டாவணத்தின் பெயர் என்ன?

பிரிவு – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) தொழில் சிறப்பு தொழில் மற்றும் வேலை வாய்ப்பு ஓர் ஒப்பீடு செய்க? (அல்லது)
ஆ) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து)
42. அ) பன்னாட்டுத் நிறுமத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் ஐந்து) (அல்லது)
ஆ) அமைப்பு முறை ஏட்டின் உள்ளடக்கங்கள் யாவை? (ஏதேனும் ஐந்து)
43. அ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து) (அல்லது)
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை வகைப்படுத்தவும். (ஏதேனும் ஐந்து)
44. அ) தனி உரிமையியலின் நன்மைகள் யாவை? (ஏதேனும் ஐந்து) (அல்லது)
ஆ) பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. (ஏதேனும் ஐந்து)
45. அ) பல்வேறு வகையான குறுகிய கால நிதி ஆதாரங்களை விளக்குக. (ஏதேனும் 5) (அல்லது) ஆ) பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை ?
46. அ) பொது கழகத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து) (அல்லது)
ஆ) வணிகத்தின் பல்வேறு தடைகளைக் விளக்குக. (ஏதேனும் ஐந்து)
47. அ) தொடர் வண்டி போக்குக்குவரத்தின் நன்மைகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து) (அல்லது) ஆ) சமூகப் பொறுப்புணர்வின் தேவைகளை விளக்குக. (ஏதேனும் 5)